23.07.2025.

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண்.35/2025</u>

அ.சா. 2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சதாம் உசேன் | | |
| த/பெ | ஹாஜா முகமது | | |
| கிராமம் | ஜானகிபுரம் | தொழில் | தனியார் நிறுவனத்தில்வேலை |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 36/2025 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 23.07.2025 |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது விழுப்புரத்தில் இயங்கி வரும் டாட்டா பைனான்ஸ் கம்பெனியில் மேலாளராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 கமாலுதீன் எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 04/08/2024 தேதியில் நாங்கள் அனைவரும் ஒரு விசேஷத்திற்கு சென்று விட்டு.பேருந்தில் வந்து இறங்கினோம். அப்போது இரவு சுமார் 7.30 மணிக்கு ஜானகிபுரம் அங்காளம்மன் கோயில் அருகில் வந்து பேருந்தில் இருந்து இறங்கினோம். இறங்கி நானும், கமாலுதீனும் நிற்கும் போது சரவணனும், வீரப்பனும் இரு சக்கர வாகனத்தில் அங்கு வந்தார்கள். அவர்கள் முன்விரோதம்

காரணமாக வண்டியை விட்டு இறங்கி எனது அண்ணனை பைப் எடுத்து அடிக்க வந்தார்கள். பைப் எடுத்து அடிக்க வந்தபோது என் அண்ணன் அதை தடுத்து விட்டார். வீரப்பன் முதலில் பைப் எடுத்து என் அண்ணனை அசிங்கமாக திட்டி அடிக்க வந்தார், என் அண்ணன் தடுத்து அந்த பைப் கீழே விழுந்து விட்டது. உடனே சரவணன் என் அண்ணன் கையில் தடுத்தவுடன் கீழே விழுந்து விட்ட பைப்பை எடுத்து எனது வலது தோள்பட்டையில் அடித்துவிட்டார். சரவணன் என்பவர் தனது இடுப்பில் இருந்த கத்தியை எடுத்து எங்களை ஜாதி பெயர் சொல்லி துலுக்க பசங்களா தேவிடியா பசங்களா நீங்கள் ஊரிலேயே இருக்கக் கூடாது, நான் ஏற்கனவே பெரிய ரவுடி, உங்களை தீர்த்து கட்டி விடுவேன் என்று மிரட்டினார். நாங்கள் சத்தம் போட்டவுடன் அருகே இருந்த என் அண்ணன் ரசாக் என்பவர் வந்து எங்களை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். என்னால் என் அண்ணனையும் என்னையும், தாக்க பயன்படுத்திய பைப் மற்றும் கத்தியை பார்த்தால் அடையாளம் காண்பிக்க முடியும். சாட்சி அந்த பைப் மற்றும் கத்தியை சரியாக அடையாளம் காண்பித்தார். அவைகள் முறையே சா.பொ. 1, 2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. காவல் நிலையத்திற்கு எனது அண்ணன் தான் சென்று புகார் மனு கொடுத்தார். இதுகுறித்து என்னை காவல்துறையினர் விசாரணை செய்தார்கள்

**1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரத்தில் எதிரிகள் இருசக்கர வாகனத்தில் வந்ததாக நான் காவல்துறை விசாரணையில் சொன்னேனா என்றால், இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தின் வழியாகத்தான் கண்டமனாடி கிராமத்திற்கு செல்லும் மக்கள் செல்ல வேண்டும் என்றும், அங்கு பொதுமக்கள் நடமாட்டம் உள்ளது என்றும், சொன்னால், சரியல்ல. அந்த இடத்திற்கு கேட் போட்டு விட்டார்கள். அதை சுற்றி குடியிருப்பு பகுதி தான் என்றால், கோயிலுக்கும் குடியிருப்பு பகுதிக்கும் இடையில் சுமார் 50 மீட்டர் தூரம் இருக்கும். நான் அரசு மருத்துவமனையில் என்னை ரசாக் என்பவர் தான் கூட்டி வந்ததாக சொன்னேனா என்றால் ஆமாம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் நான் சுமாராக

எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால், அரை மணி நேரம் இருந்திருப்பேன். தோராயமாக நேரம் சொல்ல முடியவில்லை. நான் எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு வந்தேன் என்றால், சுமார் 8.30 அல்லது 9 மணிக்கு போய் இருப்பேன் நேரம் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. நான் சம்பவ இடத்திலேயே இல்லை என்றும், எனக்கு எந்த காயமும் படவில்லை என்றும், நான் என் அண்ணனுக்கு அனுசரணையாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் யாரும் சம்பவ இடத்திலேயே இல்லை என்றும், எங்களை தாக்கவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**2 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

என்னை போலீசார் காவல் நிலையத்திற்கு சென்றபோது விசாரணை செய்தார்கள். மறுநாள் மதியம் சுமார் 12 மணிக்கு விசாரணை செய்தார்கள். என்னுடன் என் அண்ணனையும் விசாரணை செய்தார்கள். எங்கள் இருவரை மட்டுமே விசாரணை செய்தார்கள். நான் ஜானகிபுரத்தில் எத்தனை வருடமாக குடி இருக்கிறேன் என்றால் சுமார் 25 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். ஜானகிபுரத்தில் நாங்கள் சுமார் 25 வருடங்களாக குடியிருப்பதால் அனைத்து தரப்பு மக்களடனும் நட்புடன் தான் பழகுவோம் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக நான் சொல்லும் இடம் அங்காளம்மன் கோயிலாகும். அந்த கோயில் அருகில் எத்தனை வீடு உள்ளது என்றால், கோயில் அருகில் வீடுகள் இல்லை. வாய்க்கால் உள்ளது. கோயிலுக்கு அருகில் சோனம் அடகு கடை உள்ளது என்றால் சரிதான். விஜயா மளிகை கடை உள்ளது என்றால் சரிதான். குமரவேல் மளிகை கடை உள்ளது என்றால் சரிதான். ஐயப்பன் வீடு அங்கு உள்ளது என்றால் சரிதான். 12 மணிக்கு பிறகு என்னை காவல்துறையினர் வேறு எப்போதும் விசாரணை செய்யவில்லை. என் அண்ணன் எப்போது காவல்துறையில் புகார் கொடுத்தார் என்று எனக்குத் தெரியாது. வீரப்பனுக்கும், அபிபுன்னிஷா என்பவருக்கும் இட பிரச்சனை உள்ளது. அந்த இடம் புறம்போக்கு இடம் என்பதால் பிரச்சினை உள்ளது. அபிபுன்னிஷா வசிக்கும் வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் இடையே சுமார் அரை கிலோமீட்டர் தூரம் இருக்கும்

என்றால் சரிதான். அபிபுன்னிஷா தனது பிரச்சனை சம்பந்தமாக காவல்துறையில் புகார் கொடுத்துள்ளார்களா? என்றால், கொடுத்திருக்கிறார்கள் எப்போது என்று எனக்கு தெரியாது. அபிபுன்னிஷா எனது சித்தி. வீரப்பன் என்னையோ, எனது அண்ணனையோ தாக்கவில்லை என்றும், சித்திக்கு ஆதரவாக நடக்காத சம்பவத்தை நடந்ததாக சொல்லி நான் பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் அப்போது தனியார் பேருந்தில் வந்தோம். விசேஷத்திற்கு போய்விட்டு பேருந்தில் இறங்கியபோதுதான் சம்பவம் நடந்ததாக காவல்துறையில் சொன்னேனா? என்றால் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**